RBI/2004/227

UBD..NO.UBD. BPD.PCB. Cir. 48/09.161.00/2003-04 மே 29, 2004

அனுத்துத் தொடக்கநிலை (நகர்ப்புறக்) கூட்டுறவு வங்கிகளின்
நிர்வாக அதிகாரிகளுக்கும்,

அன்புடையீர்,

**"உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்" – வழிகாட்டுதல் – கீழ்படிதல்**

நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் கணக்குகள் ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய "உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்" என்ற கோட்பாடுகளை அறிய இது குறித்த எங்கள் சுற்றறிக்கை எண் UBD.NO.UBD. DS.PCB.Cir.17/13.01.00/2002-03, 18.9.2002 தேதியிடப்பட்டதைப் பார்வையிடுக. அதன்படி தேவைகளுக்காக இசைந்து நடக்கையில், நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் அதிகமான சில தனிப்பட்ட தகவல்களையும் சேகரிக்கின்றன.

2. திரு S.S. தாராபூர், தலைமையிலமைந்த பொதுநலசேவைக்கான செயல்முறை மற்றும் செயல் நிறைவேற்ற ஆய்வுக்குழு, (Committee on Procedures & Performances Audit on Public Services) கண்டறிந்தபடி வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை வங்கிகள் பல்வேறு வகையில் தனது சேவைகளை விற்க பயன்படுத்திக் கொள்கின்றன. இத்தகு தகவல்கள் சில சமயங்களில் வேறு நிறுவனங்களுக்கும் அளிக்கப்படுகின்றன. வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கும்போது "உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்" என்ற கோட்பாட்டின்கீழ் பெறப்பட்ட தகவல்கள் ரகசியமாக வைக்கத்தக்கவை. அவற்றைப் பலரறியக்கூறுவதோ அல்லது வேறு பல குறுக்கு வணிக நோக்கங்களுக்கு பயன்படுத்துவதோ வாடிக்கையாளரின் நம்பகத்தன்மைக்கு குந்தகம் விளைவிப்பதாகும் அது கடமையிலிருந்து பிறழ்வாதாகும். வாடிக்கையாளரின் நலன் கருதியே இந்தக் கடமையை ஆற்றும்படி நகர்ப்புறக்கூட்டுறவு வங்கிகள் தங்கள் வங்கிக்கிளைகளுக்கு அறிவுறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. வாடிக்கையாளர் குறித்த தகவலை "உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்" என்ற கோட்பாடல்லாதவற்றை சேகரிக்க வங்கிகள் விரும்பினால் அவற்றைக் கணக்குத் துவங்கும்படிவத்தின் ஒரு பகுதியாக ஆக்கக் கூடாது. இத்தகு தகவல்களை, அதற்கான நோக்கங்களை, வாடிக்கையாளருக்கு விளக்கிச்சொல்லி எந்தவித வற்புறுத்தலும் இன்றி தேவைக்கான உபயோகத்திற்கான அவரின் தெளிவான ஒப்புதலைப் பெற்ற பின்னர் தனியே சேகரிக்கப்படவேண்டும்.

4. இந்த விவரத்திலான நடைமுறையிலிருக்கும் பழக்கங்களை தமது குழுமம் அல்லது ஆட்சிப்பொறுப்பாளரைக் கொண்டு சோதித்தறிந்து பின்னர்

தேவையான உத்தரவுகளை தமது கிளைகளுக்கு அனுப்பி அவற்றின் இசைவான நடத்தையை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

5. பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை எமது பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்புக.

தங்கள் உண்மையுள்ள

K. கருப்பசாமி
தலைமைப் பொது மேலாளர் (பொறுப்பு)